# Salve Regina




SOCIETY OF ST. PIUS X

ஏப்ரல் 2008

மலர்: 3 இதழ்: 3

(தனிச்சுற்றுக்கு மட்டும்)



" Scimus Christum surrexisse a mortuis vere: tu nobis, victor Rex, miserere. "


" நிச்சயமாக கிறீஸ்து மரித்தோரில் நின்றுயிர்த்தாரென நாம் அறிவோம்
மெச்சும் வெற்றிபெற்ற நல்லரசே! எங்கள் மேலிரக்கஞ்செயும், அல்லேலுய்யா "

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்

**- அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -**

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

## (5) புதுப்பூசையில் செய்யப்படும் தாறுமாறான மாற்றங்கள் !



*புதிய பூசையில் மிகவும் அபாயகரமான பதித கொள்கைகளை புகுத்தியது மட்டுமல்லாமல், சிலர் குருவானவரையே பலிபூசையிலிருந்து முற்றிலும் அகற்றிவிடத் திட்டமிட்டார்கள். இதை செயல்படுத்தும் விதமாக குருக்கள் இல்லாத ஞாயிறு வழிபாட்டு முறை என்று ஒரு செயல்முறையை கொண்டுவந்து விட்டார்கள்!* (SAAP - Sunday Assemblies in the Absence of the Priest).

*ஆண்டவருடைய நாளை பரிசுத்தமாய் அனுசரிக்க விசுவாசிகள் ஒன்றுகூடி ஜெபிப்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். ஆனால், குருக்கள் இல்லாத ஞாயிறு வழிபாடானது, உண்மையில் ஒரு வரண்ட பூசை அல்லது வெறுமையான பூசையாகவே இருக்கும். இப்படிப் பட்ட வழிபாட்டில் வசீகரம் மட்டும்தான் இல்லாமல் இருக்கிறது. லீல் (Lille) நகரத்தில் உள்ள சமுக மற்றும் சமய கல்வியின் பிராந்திய மையம் "இவ்வாறு வசீகரம் இல்லாமை என்பது ஒரு தற்காலிக நிலைமைதான்; மாற்று அறிவிப்பு வரும்வரை இவ்வசீகரத்தை செய்ய பொது நிலையினருக்கு அதிகாரம் இல்லை!!" என்று கூறுகிறது. சில வேளைகளில் குருக்கள் இல்லாத நிலைமை வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகிறது. இந்த குருக்கள் இல்லாத நிலைமையானது, பொது நிலையினர் குருக்கள் இல்லாவிட்டால் தாங்களே சூழ்நிலையை சமாளிக்க உதவியாக இருக்கும் என்றே நம்பப்படுகிறது! "குருக்கள் அற்ற ஞாயிறு வழிபாட்டு முறையானது, மக்களின் மனநிலை, சிந்தனைகள் மாற்றம் அடையும் வரைக்கும் செயல்படும் மாற்று ஏற்பாடுதான்" என்றும் Demain La Liturgie என்ற பத்திரிகையில் சங். ஜெலினோ (Gelineau) என்பவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கெனவே குருக்கள் பற்றாக்குறையை ஒரு காரணமாக கூறிய அவர் இப்போது அதை மறுக்கும் வகையில், "துரதிர்ஷ்டமாக திருச்சபையில் அதிகபடியான குருக்களின் எண்ணிக்கை இந்த மனநிலை மாறுவதற்குத் தடையாக இருக்கிறது" என்று குறைபட்டுக் கொள்கிறார்?!*

*லூத்தர், ஒப்புக்கொடுக்கும் ஜெபத்தை மாற்றிவிட்டான்; பலியே இல்லாத போது எதற்காக மாசற்ற பரிசுத்த அப்பத்தை ஒப்புக்கொடுக்க வேண்டும்? பிரான்ஸ் நாட்டில் புதிய பூசையில் ஒப்புக்கொடுக்கும் ஜெபம் நடைமுறையில் இல்லை. புதிய ஞாயிறு பூசை புத்தகத்தில் ஒப்புக்கொடுக்கும் ஜெபம் என்ற பெயரில் நன்றியறிதல் ஜெபமாகச் சொல்லப்படுகிறது. அதாவது நிலத்தின் விளைச்சலுக்கு நன்றியறிதல்! இதைப் புரிந்துகொள்ள பாரம்பரிய ஒப்புக் கொடுத்தல் ஜெபத்தை, புதிய 'ஒப்புக்கொடுக்கும்' ஜெபத்துடன் சிறிது ஒப்பிட்டுப் பார்ப்பதே போதுமானது. பாரம்பரிய ஒப்புக்கொடுத்தல் ஜெபமானது தேவ கோபத்தைத் தணிக்கும், நிந்தைகளுக்குப் பரிகாரம் செய்யும் பலியின் தன்மையை தெளிவாக காண்பிக்கிறது. எப்படியெனில்:* **"பாரம்பரிய பூசையில் குரு அப்பத்தை கையிலெடுத்து "...அபாத்திர ஊழியனாகிய அடியேன், கணக்கற்ற என் பாவங்களுக்காகவும், துரோகங்களுக்காகவும், அசட்டைத்தனங்களுக்காகவும் இங்கு சூழ்ந்து நிற்கின்ற சகலருக்காகவும், இன்னும் சீவியரும், மரித்தோருமான எல்லாக் கிறீஸ்துவ விசுவாசிகளுக்காகவும், எனக்கும் அவர்களுக்கும் நித்திய சீவியத்தின் இரட்சணியத்திற்காக உதவும்படி... உமக்கு ஒப்புக் கொடுக்கிற இந்த மாசற்ற பலிப்பொருளை**

கவலைப்படும் கத்தோலிக்கர்களாக மாறுகிறீர்கள்! நாம் பார்க்கும் பூசை செல்லதக்கதுதானா? நாம் பெற்றுக் கொள்ளும் அப்பம் உண்மையிலேயே வசீகரப்படுத்தப் பட்டதுதானா? என்பன போன்ற கேள்விகள் உண்மை யிலேயே கத்தோலிக்கர்களை மிகுந்த கவலையடையச் செய்கின்றன.

இது பெரிய பிரச்சினை. இது குறித்து சாதாரண கத்தோலிக்கன் எப்படி முடிவு செய்வான்? பூசையானது செல்லத்தக்கதாக இருப்பதற்கு சில இன்றியமையாத காரியங்கள் தேவை. அவை பின்வருமாறு: பொருள் (Matter), வடிவம் (Form), பலி நிறைவேற்றும் கருத்து (Intention) மற்றும் செல்லுபடியான குருப்பட்டம் பெற்ற குரு (Validly ordained priest). இவை அனைத்தும் நிறைவேற்றி பூசை செய்யப்பட்டால் மட்டுமே பூசை செல்லத்தக்கதாக இருக்கும். அதோடு பலியும் தேவ திரவிய அநுமானமும் முழுமையாக நிறைவேறுவதற்கு காணிக்கை ஒப்புக்கொடுக்கும் ஜெபம் (Offertory), நடுபூசை (Canon) மற்றும் குருவானவருடைய நற்கருணை உட்கொள்ளல் (Priest's communion) ஆகியவை அவசிய மாகிறது. ஆனால் பூசை செல்லுபடியாவதற்கு இவை அவசியமில்லை. கர்தினால் மின்ட்சென்டி ஆண்டகை கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த போது சிறைக் காவலர்களுக்குத் தெரியாமல் இரகசியமாக சிறிது அப்பத்தின் மீதும், வழங்கப்பட்ட இரசத்தின் மீதும் வசீகர வார்த்தையை சொல்லி மெய்யாகவே பலியையும், தேவதிரவிய அநுமானத்தையும் நிறைவேற்றி தன்னையே வளப் படுத்திக்கொண்டு வந்தார்! நான் முன்பு குறிப்பிட்டது போல, தேன் ஊற்றி செய்யப்பட்ட கேக் பண்டங் களைக் கொண்டு "பூசை" செய்த அமெரிக்க நாட்டு மேற்றிராணியாரின் செயல் நிச்சயமாக செல்லாது! அது தேவ தூஷணம்! எவ்விடங்களிலெல்லாம் வசீகர வார்த்தை மிகுந்த அலட்சியத்தோடே மாற்றப்படு கிறதோ அல்லது தவிர்க்கப்படுகிறதோ அங்கு மெய்யான பலியோ, தேவதிரவிய அநுமானமோ நிறைவேறுவ தில்லை. 'புதுமை' பித்து பிடித்திருக்கும் நவீனர்கள் எவ்வளவு தூரம் போய்விட்டார்கள் என்றால், ஒரு குரு வசீகரத்தையே மறந்துவிட்டு பூசை செய்தார்! பூசை செய்யும் குருவானவருடைய கருத்தை நாம் எப்படி அறிந்து கொள்வது? குருவானவர்களுடைய விசுவாசம் தளர்ந்தும், கெட்டுப் போயும் வருவதாலும், திருச்சபை எக்காலத்திலும் செய்து வருவதை தாமும் செய்கிறோம் என்ற கருத்து இல்லாததினாலும், இன்று செல்லுபடி யாகக்கூடிய பூசைகள் அரிதாகி வருகின்றன. நவீன கால குருமடங்கள் மெய்யான செல்லத்தக்க பலிபூசையை நிறைவேற்றும் குருக்களை தயார் செய்வதில்லை. பலிபூசையை நிறைவேற்றுவது தங்களுடைய குருத்துவ ஜீவியத்தின் மிக முக்கியமான அலுவல் என்பதை குருமாணவர்களுக்கு ஒருபோதும் கற்பிப்பதில்லை.

பீட அர்ச்சியசிஷ்டகல் இன்றி, சாதாரண பாத்தி ரங்களைக் கொண்டும், புளித்த அப்பங்களைப் பயன் படுத்தியும் கொச்சையான வார்த்தைகளை நடுபூசை யிலும் (Canon) கூட பயன்படுத்தி செய்யப்படும் அநேகப் பூசைகள் பெரிய அவசங்கைகளை ஏற்படுத்துகிறது என்று எவ்வித மிகைப்படுத்துதலுமின்றி சொல்லலாம். இவை விசுவாசிகளின் விசுவாசத்தை தளர்த்தி, குறைக் கிறது. இந்த அவசங்கையான காரியங்கள் தெய்வீக உணர்வை - சுபாவத்திற்கு மேலான உணர்வை இழக்கச் செய்து, வெறும் இயற்கையான சமய காரியங்களாக மாற்றுகின்றன.

உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பமானது ஒருவேளை பின்வரும் வினாக்களை மனதிலே எழச் செய்யக்கூடும். பாரம்பரிய பூசை இல்லாத வேளையில் ஞாயிறு, கடன் திருநாட்களை அநுசரிக்க அவசங்கையான ஆனாலும், செல்லுபடியாகக்கூடிய பூசையில் நான் பங்கு பெறலாமா? இதற்கு பதில்: **கூடாது** என்பதே! அவ சங்கையான 'பூசை' ஞாயிறு கடனின் பொருளாகாது; இதில் நாம் ஒழுக்கநெறி சாஸ்திர (Moral Theology) மற்றும் திருச்சபை சட்டம் ஆகியவை நமது விசுவாசத் திற்கு ஊறு விளைவிக்கும் அல்லது அவசங்கையான காரியத்தில் நாம் என்ன செய்யவேண்டுமென்று கற்பிக்கின்றதோ, அதே நடைமுறைகளை நாம் கடைப் பிடிக்கவேண்டும்.

பக்தியோடும், திருவழிபாட்டு ஒழுங்குகளை மதித்து செய்யப்படும் 'புதுப்பூசை' விசயத்திலும் அதே போன்ற எச்சரிக்கையை நாம் கொள்ள வேண்டும். ஏனெனில் புதுப்பூசையானது புராட்டஸ்டாண்ட் பதித உணர்வினால் ஊறிப்போய் இருக்கிறது. விசுவாசத்திற்கு கேடு விளைவிக்கும் நஞ்சு அதில் இருக்கிறது. வேத போதக நாடுகளில் நிலவும் விசுவாசமின்மை என்ற நிலைக்கு இன்று எல்லா நாடுகளும் வந்துவிட்டன. அதாவது அநேக இடங்களில் வேத போதக நாடுகளில் எப்படி வருடத்திற்கு சில தடவைகள் மாத்திரமே பூசை காண வாய்ப்பு இருக்கிறதோ, அதே போலாகி விட்டது. ஆக, மெய்யான கத்தோலிக்க விசுவாசத்தை, திவ்விய பலிபூசையை விரும்புவோர் மிகப் பிரயாசைப்பட்டு ஆங்காங்கே செய்விக்கப்படும் பாரம்பரிய பூசையை - வரப்பிரசாதத்தினுடைய பரிசுத்ததனத்தின் ஊரணி யாகிய அப்பலியைக் கண்டு ஒப்புக்கொடுக்க வேண்டி யது அவசியம்.

அர்ச். ஐந்தாம் பத்திநாதரால் ஒழுங்கு செய்யப் பட்ட பூசை மூன்று உண்மைகளை மிகத் தெளிவாகத் துலங்கச் செய்யும். அவை: **பலி, மெய்யான தேவ பிர சன்னம்** மற்றும் **குருத்துவம்**. மேலும் திரிதெந்தீன் பொதுசங்கம் கற்பிப்பது போல, சுபாவத்திற்கு மேலான காரியங்களை தியானிப்பதற்கு மனித சுபாவத்திற்குத் தேவைப்படும் வெளி உதவியை தன்னகத்தே கொண் டிருக்கிறது இந்த திவ்வியபலி. ஏற்கெனவே ஏற்படுத்தப் பட்டிருக்கிற பழக்கவழக்கங்கள் இஷ்டம் போல் செய் யப்பட்டவை - ஏற்படுத்தப்பட்டவை அல்ல. அவை களை ஓரம்கட்டி தள்ளிவிடுதல் என்பது அபத்தம்! விசுவாசத்திற்கு - சுபாவத்திற்கு அடுத்தவைகளை தள்ளி விடுபவர்களுக்கு கேடு வரும் என்பது நிச்சயம். (தொடரும்)

ஆகமனகாலத்தில் இரட்சகரை எதிர்பார்த்தலும், அவரது பிறப்பின்போது சந்தோஷப்படலும், சப்தரிகை காலத்தில் கடவுள் நம்மை அழைத்ததும், தபசு காலத்தில் நாம் பச்சாதாபப்படலும், பாடுகள் காலத்தில் பரிதாபக் காட்சி தோன்றலும், கிறீஸ்துவின் மகிமையின் காலத்திற்குத்தான் நம்மைத் தயாரித்து வந்தன. இதன் பின்வருங்காலத்தில் திவ்விய இஸ்பிரீத்துசாந்து இந்தத் தெய்வீக உயிரை நம் ஆத்துமங்களில் பொழிந்து நம்முடைய உயிர்தெழுதலுக்கு ஆயத்தஞ் செய்வார். (உரோ. 8:11).

இதைக் குறிக்கவே அக்காலத்தில் ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், நற்கருணை என்ற தேவதிரவிய அனுமானங்களைப் பாஸ்கு காலத்தில் விசேஷமாய்ப் பெற்றுக்கொள்ளும் வழக்கம் உண்டாயிற்று. இப் பாஸ்குத் திருநாள் நாம் பெற்றிருக்கிற இந்தத் தேவ திரவிய அனுமானங்களை நமக்கு ஒவ்வொரு வருடமும் ஞாபகமூட்டி, அவற்றால் நமக்கு அருளப்பட்ட புது சீவியத்தில் மென்மேலும் நாம் வளர்ந்து, கிறீஸ்துவின் பூரண அளவை அடையவேண்டுமென்று கற்பிக்கின்றது.

### பாஸ்கு காலத்தின் வரலாறு

கிறீஸ்துவ திருநாட்களில் மிகப் பழையது இதுவே. திருச்சபை ஆரம்பத்தில் இதைப் புதிதாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை. ஏனெனில் இது பழைய ஏற்பாட்டு **யூதர்களுடைய பாஸ்காவின் தொடர்ச்சியாகக் கருதப்பட்டது.** அப்போஸ்தலர்கள் காலத்திலிருந்தே கிறீஸ்துவர்கள் தாங்கள் நரக பாரவோனின் நித்திய அடிமைத்தனத்தினின்று, பாவத்தினின்றும் விடுதலையடைந்ததையும் ஆண்டவரின் திரு மரணத்தையும் உத்தானத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டாடினார்கள். ஏனெனில் பழைய ஏற்பாட்டின் பாஸ்கு செம்மறி திருச்சிலுவையில் பலியான கிறீஸ்துவின் முன் அடையாளமென நன்கு அறிந்திருந்தனர்.

பாஸ்கா விழாவின் நாளைப்பற்றி முதல் நூற்றாண்டுகளில் கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலும் இருந்த ஆசாரத்தில் சிறிது வேறுபாடிருந்தது. கீழ்நாட்டினர் கிறீஸ்துவின் மரணத்தையே அதிகமாக மதித்தவர்களாய்ப் பாஸ்குத் திருநாள் மாதத்தில் எந்த நாளில் வந்தாலும் அந்நாளிலேயே அதைக் கொண்டாடி வந்தார்கள். மேல்நாட்டவர்களோ கிறீஸ்துவின் உத்தானமே முதன்மை வாய்ந்ததெனக் கிறீஸ்து உத்தானமான யூதர்களுடைய நிசான் மாதத்தின் 14-ம் தேதிக்குப் பின்வரும் ஞாயிற்றுக்கிழமையே எப்போதும் பாஸ்குத் திருநாளாக ஏற்படுத்தியிருந்தனர். இறுதியாக நீசேயா பரிசுத்த சங்கம் (கி.பி. 321) ஆண்டவர் மரித்த நாளை வெள்ளிக்கிழமையன்றும், அவர் உயிர்த்தெழுந்த நாளை ஞாயிறன்றுங் கொண்டாடக் கட்டளை பிறப்பித்து, நிசான் மாதத்திற்கு சரியான இளவேனிற் காலத்தில் வரும் முதல் பூரண சந்திர நாளுக்குப் பின்வரும் ஞாயிற்றுக்கிழமையன்றே இது கொண்டாடப்பட வேண்டுமென்று திட்டஞ்செய்தது.; எனவே, மார்ச் மாதம் 22-ம் தேதிக்கு முன்னதாகவோ அல்லது ஏப்ரல் மாதம் 25-ம் தேதிக்குப் பின்னதாகவோ இந்நாள் வராது.

### பாஸ்கு காலத்தின் ஆராதனைமுறை

பாஸ்குக் காலம் பெரிய சனிக்கிழமையிலிருந்து ஆரம்பித்து திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் சனியன்று முடியும். இக்காலத்தில் மிகப் பெரிய சம்பவங்களான கிறீஸ்து உயிர்த்தெழுந்ததையும் அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றதையும் திவ்விய இஸ்பிரீத்துசாந்து உலகத்தில் இறங்கி வந்ததையுங் கொண்டாடுகிறோம். இக்காலத்தில் ஆராதனைமுறையில் அக்களிப்பையும் வெற்றியையும் குறிக்கும் **"அல்லேலுய்யா"** என்ற எபிரேய பதம் அடிக்கடி தோன்றுவது, முழந்தாளிலிருந்து செய்யும் சில ஜெபங்களை நின்றுகொண்டு ஜெபிப்பது, உபவாசம் நீக்கப்பட்டிருப்பது, முதலியன முக்கியமாகக் கவனிக்கப்பாலன.

மேலும் பரிசுத்த பீடத்தின் அலங்காரத்தினாலும், சந்தோஷகரமான வாத்தியக் கருவிகளாலும் பாஸ்கு மகிழ்ச்சி அறிவிக்கப்படுகின்றது. ஞானஸ்நானத் தண்ணீரைக் குறிக்கும் அழகிய பாட்டு தீர்த்தந் தெளித்தல் வேளையில் பாடப்படுகின்றது. நாற்பது நாட்களளவும் கிறீஸ்து இப்பூவுலகில் தங்கியிருந்ததின் அடையாளமாகப் பாஸ்கு மெழுகுதிரி விசுவாசிகளின் முன் பூசை நேரத்தில் ஒளிர்கின்றது. சந்தோஷத்தையும் பரிசுத்ததனத்தையும் குறிக்க வெள்ளை உடுப்புகள் தரிக்கப்படுகின்றன. பாஸ்குத் திருநாளின் யோசனை மட்டுமே விசுவாசிகளிடத்தில் இருக்கவேண்டுமென்று பாஸ்கு வாரத்தில் அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாட்கள் கொண்டாடப்படுவதில்லை.

### பாஸ்குத் திருநாளுக்குப் பின்வரும் காலம்

பாஸ்குத் திருநாளுக்குப் பின்வரும் ஐந்து வாரங்களுக்கு இப் பெயர் வழங்கிவருகிறது. இதன் முதல் ஞாயிறு "வெள்ளை ஞாயிறு" என்று அழைக்கப் படுகின்றது. புதிதாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் இந்த எட்டு தினங்களாக அணிந்திருந்த வெள்ளை உடுப்புக் களை இன்று களைந்துவிடுவது வழக்கம்.

இப்பாஸ்குக் காலத்தில் புதிதாக மனந்திரும்பின வர்களுக்காக விசேஷ ஜெபம் செய்யப்படுகிறது. கிறீஸ்து தம் அப்போஸ்தலர்களுக்குத் தம்மைக் காண்பித்த தையும், தாம் திருச்சபைக்கு அனுப்பப்போகும் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின்மேல் விசுவாசத்தை மூட்டிய தையும் **சுவிசேஷ வாக்கியங்கள்** எடுத்துரைக்கின்றன. இரட்சணியப் பலன்களால் உண்டான மனிதனின் ஞானப் புதுப்பிறப்பை **நிருப வாக்கியங்கள்** நினைவுறுத்துகின்றன. . . . தொடர்ச்சி பக்கம் 10.

அறிவில் சிறந்த அவர் கிரேக்கம், பிரெஞ்ச், கணிதம், இசை என அனைத்து துறையிலும் கற்றுத் தேர்ந்து சட்டம் பயின்று 1501-ல் வழக்கறிஞரானார்.

தமது 21-வது வயதில் லண்டன் கர்த்தூசியன் துறவற மடத்தில் தனது படிப்பைத் தொடர்ந்த தால் துறவிகளைப் போல் ஜெபதப வாழ்வில் ஈடுபாடு கொண்டார். தவத்தை அனுசரிக்க தனது உடையினுள் குத்தும் மயிர்ச்சட்டையை அணியலானார். இது அவரது கடைசி காலம் வரை நீடித்தது. துறவற வாழ்வு தமக்கு இல்லையென்பதை உணர்ந்து 1510-ம் ஆண்டில் **ஜோன் கோல்ட்** என்பவளை திருமணம் செய்து கொண்டார். 4 குழந்தைகள் பிறந்ததும் மனைவி மரணமடையவே குழந்தைகளை வளர்க்க **ஆலிஸ் மிடில்டன்** என்ற விதவையை மறுமணம் செய்து கொண்டார்.

### அரசனின் உற்ற நண்பர்

இச்சமயத்தில் தான், 1509-ல் 8-ம் ஹென்றி அரியனையேறினான். பல கலைகளையும் கற்றுத் தேர்ந்து எப்போதும் நகைச்சுவை உணர்வோடு திகழும் தாமஸ் மோரின் தோழமையை விரும்பினான். தாமஸ் மோரை அரசவையின் உறுப்பினராக்கினான். விரைவில் தமது சான்சலராக உயர்த்தி மகிழ்ந்தான். அரசனின் நட்பும், பெரும் பதவியும் தம்மை வந்தடைந்தாலும் எப்போதும் தாழ்ச்சியையும், தனிமையையும் விரும்பு வார் தாமஸ் மோர். அரசனின் நட்பு எந்த அளவிற்கு இருந்ததென்றால் சமயாசமயத்திற்கு அவன் தாமஸ் மோரின் இல்லத்திற்கே வருகை தந்து உரையாடுவான்.

### சிறந்த கத்தோலிக்க விசுவாசி



சான்சலர் தாமஸ் மோரின் குடும்பம் மிகப் பெரியது. மகன், மருமகள், மூன்று மகள்கள் அவர்களது கணவன்மார்கள், 11 பேரக் குழந்தைகள் என தனது பெரிய குடும்பத்தை கத். விசுவாசத்திலும், ஜெப வாழ் விலும் ஈடுபடுத்தி வழிநடத்தினார். தனது அறிவார்ந்த விசுவாச அறிவுரையாலும், அன்பான கனிவிலும், நகைச்சுவைப் பேச்சுக்களாலும் குடும்பத்தினரை எப் போதும் உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பார். தினமும் இரவில் குடும்ப ஜெபம் இருக்கும். அதில் வீட்டு வேலையாட்களும் பங்குபெறுவர். சாப்பாட்டு வேளை யிலும் பக்தி நூல்களை உரக்க வாசிக்கச் செய்து கேட்டுக் கொண்டே உண்ணும் பழக்கத்தைக் கடைப்பிடித்தார். தாம் பெரிய சான்சலர் பதவியில் இருந்தாலும் தினசரி பூசை காண்பதும், ஞாயிறு திருப்பலியில் பாடற்குழு வினரோடு சேர்ந்து பாடல்களை இசைப்பார். கத். விசுவாசத்தின் மீது மிகுந்த பற்று கொண்டிருந்த அவர் பாப்பரசரை அதிகம் நேசித்தார். ஒரு முறை, ஞாயிறு திருப்பலியில் பாடற் குழுவினரோடு சான்சலர் தாமஸ் மோர் பாடிக்கொண்டிருப்பதைக் கண்டு வியந்த நார்ஃபோல்க் பிரபு என்பவர் "எங்களது மேன்மை மிக்க சான்சலர் சர்வேசுரனின் ஆலய பணியாளர்! நீங்கள் அரசனையும், அவன் தந்த பதவியையும் அவமரியாதை செய்கிறீர்கள்" என்று குறை கூறினார். அதற்கு தாமஸ் மோர், "சர்வேசுரனுக்கு ஊழியம் புரிவது - அரச எஜமானுக்கு அவமரியாதை செய்வதாகாது!" என்று பதிலளித்தார்.

### அரசனின் பிரிவினை


அச்சமயத்தில் லூத்தரின் பதித கொள்கை இங்கிலாந்து நாட்டிலும் நுழைந்தது. சான்சலர் தாமஸ் மோர் அவைகளை கண்டித்து, எழுதி வந்தார். அச்சமயம் ஒரு பெரும் சோதனை வந்து சேர்ந்தது. அது என்ன வெனில் அரசன் ஹென்றி தனது மனைவியான அரசி **கத்தரீனை** வாரிசு இல்லை என்ற குற்றம் சுமத்தி தள்ளி வைத்தான். தனது திருமணம் செல்லாது என்று அறிவிக்கும்படியும், **ஆன்பொலின்** என்பவளை திருமணம் செய்துகொள்ள உத்தரவு தரும்படி பாப் பரசரைக் கேட்டுக் கொண்டான். ஆனால் பாப்பரசர் அதற்கு உடன்பட மறுக்கவே, கோபம் கொண்ட 8-ம் ஹென்றி பாப்பரசரை எதிர்த்து, மறுத்து இங்கிலாந்து திருச்சபைக்கு நானே தலைவன். பாப்பரசர் அல்ல! என்ற பிரிவினையை தோற்றுவித்தான். ஆன் பொலினையும் இரண்டாம் தாரமாக திருமணம் செய்து கொண்டான். இதனை ஏற்காதவர்கள் தேச துரோகி என்று மரண தண்டனை தீர்ப்பு பெற்றனர்.

### தாமஸ் மோரின் எதிர்ப்பு

அரசன் தனது நண்பனாக இருந்தாலும் அவனது இந்த அநியாய பிரிவினையை சான்சலரான சர். தாமஸ் மோர் எதிர்க்கலானார். உடனே தமது சான்சலர் பதவி யை இராஜினாமா செய்தார். அதனால் வருவாய் இழந்து குடும்பம் வறுமையில் வாடினாலும் தனது கத். விசுவா சத்தில் உறுதியாக இருந்தார். எப்போதும் மகிழ்ச்சியாக இருந்த அவர் வறுமையைக் கண்டு வருந்திய குடும்பத் தினரிடம் "நமது விசுவாசத்தைக் காப்போம். தேவைப் பட்டால் வீடு வீடாய்ப் பாடிக்கொண்டு சென்று உதவி கேட்போம். சர்வேசுரன் எப்போதும் நம்மோடிருப் பார்" என்று கூறி தேற்றுவார். இப்படியே 18 மாதங்கள் எழுதுவதில் செலவழித்த அவர் அரசனின் மறுமணத்தை புறக்கணித்ததால், கைது செய்யப்பட்டு லண்டன் டவர்

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!




**[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]**

### முதல் பாகம்

**இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)**

**5. சபைச் செபம் —(Collecta)**

குருவானவர் சபைச் செபத்தை **(Collecta)** சொல்ல ஆரம்பிக்கும்முன் விசுவாசிகளின் பக்கமாய்த் திரும்பி **"Dominus vobis cum... ஆண்டவர் உங்களோடிருப்பாராக"** என்று முகமன் கூறுகிறார். அதற்கு விசுவாசிகளும் பீடபரிசாரகன் அல்லது பாடற் குழுவின் வழியாக **"Et cum Spiritu tuo - உமது ஆவியோடும் இருப்பாராக"** என்று பதிலுரை கூறுகிறார்கள். இதற்கு



**ஆண்டவர் உங்ளோடு இருப்பாராக**

என்று முகமன் கூறும் குருவானவர்

பொருள் என்னவெனில்: ஆண்டவர் நம் ஜெபங்களைக் கேட்க நம் அருகில் வந்திருக்கிறார் - ஆகவே நாம் பயப்படாமல் நம்பிக்கையுடன் ஜெபிப்போமாக என்று குரு கூறுவதும், அதற்கு விசுவாசிகளின் ஆமோதித்தலுமாகும்.

குருவானவர் மார்பில் கரங்களை குவித்தவாறு, கண்களை பக்தி சிரவனத்தோடு தாழ்த்தியவாறே விசுவாசிகளின் பக்கமாகத் திரும்பி, மெதுவாக கரங்களை விரித்து மீண்டும் சேர்த்து குவித்தவாறே **"ஆண்டவர் உங்களோடிருப்பாராக"** என்ற ஆசீர்வாதமான வாழ்த்துச் சொற்களைக் கூறுகிறார். இவ்வாறு அவர் கரங்களை விரிக்கும் நிலையானது தாம் மன்றாடிக் கேட்கும் ஆசீர் கிடைக்க வேண்டும் என்ற குருவின் ஆவலையும், மீண்டும் கரங்களை சேர்த்து குவிப்பது - தமது தாழ் நிலையை எண்ணி, ஆண்டவரிடமே தமது நம்பிக்கையை வைத்து தன்னையே நம்பாத குருவின் மனப்பான்மையைச் சுட்டிக் காட்டுகிறது.

இப்படி குருவானவர் கூறும் **"ஆண்டவர் உங்களோடிருப்பாராக"** என்ற முகமன் திவ்விய பலிபூசையில் '8' தடவைகள் இடம் பெற்றுள்ளது. இது திவ்விய பலிபூசையின் போது குருவானவருக்கும் விசுவாசிகளுக்கும் இடையே இருக்கும் ஞான ஒன்றிப்பை அதிகரிப்பதாகவும், அதற்கான ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் இருக்கிறது. இந்த முகமன், பூசையின் வெவ்வேறு நிலைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தக் கூடியதாகவும், அதோடு ஆண்டவரின் அளவற்ற வரப்பிரசாதங்களையும், ஆசீர்களையும் வழங்குவதாகவும் திகழ்கின்றது.

### இஸ்பிரீத்துசாந்துவின் ஏழு வரங்கள்

பூசையின் முக்கிய '7' நிலைகளில் '7' தடவைகள் **"ஆண்டவர் உங்களோடிருப்பாராக"** என்ற மங்கள வாழ்த்தை குருவானவர் கூறுவதானது: இஸ்பிரீத்துசாந்துவின் '7' வரங்களை விசுவாசிகளுக்குப் பெற்றுத் தருவதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு தடவை குருவானவர் வாழ்த்தும் போது விசுவாசிகளுக்கு இஸ்பிரீத்துசாந்துவின் '7' வரங்களில் ஒன்றை வழங்குவதாகவும், அதனையே குருவானவரும் பெற்றுக்கொள்ள விசுவாசிகள் **"உமது ஆவியோடும் இருப்பாராக"** என்று பதிலுரைத்து இறைஞ்சுவதாகவும் திகழ்கின்றது. பலிபூசையின் குறிப்பிட்ட '7' நிலைகளில் இவ்வேழு வரங்களும் மிகப் பொருத்தமுடன் வழங்கப்படுகின்றன.

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (9) மகா அன்புக்கு பாத்திரமான மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

யார் அதிகம் நேசிக்கப்பட தகுதியாவார்? யாரை அதிகம் நேசிக்க முடியும்? யார்தான் அன்புக்குப் பாத்திரமானவராக இருக்க முடியும்? உத்தமமான இயல்புடையவர் – அழகுள்ளவர் திறமையுள்ளவர் – உந்நத பிறப்பை உடையவர் இப்படி மேலான நன்மைத்தனங்களால் நிறைந்தவரே நேசிக்கப்படுவார்கள். இது உலக இயல்பு. தேவ கன்னி மாதாவும் இத்தகைய உயர்வுகளையெல்லாம் பெற்று திகழ்கின்றதாலேயே தாய் திருச்சபை அவர்களை மகா அன்புக்குப் பாத்திரமான மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று பிரார்த்திக்கின்றது. மாதாவின் உயர்வுகளில் இரண்டினை மட்டுமே சிறிது அறிந்து அவர்களை நேசிப்போம்.

### தமது அழகினால், அன்புக்கு பாத்திரமான மாதா !

*நமது தேவதாய் மகா அன்புக்கு பாத்திரமாக திகழ்கின்றார்கள். ஏனெனில் சர்வேசுரன் படைத்த சிருஷ்டிகளிலேயே மிகவும்* **அழகு ரூபவதியாக** *அவர்களே திகழ்கின்றார்கள்! தேவதாய் தமது ஆத்தும சரீர அழகால் உயர்ந்து காணப்படுகிறார்கள். அர்ச். எபிபானியுஸ் என்பவர், "சர்வே சுரனுக்கு அடுத்தாற்போல் அழகுமிக்கவள் நீரே; தூதர், அதிதூதர் முதலிய நவ விலாச சம்மனசுக்களின் அழகு உமக்கு முன்பாக மங்குகிறது" என்ற தேவதாயின் அழகை வர்ணிக்கிறார். பரிசுத்த தூதர்களின் அழகே மாதாவின் அழகிற்கு முன்பாக மங்கிக் காணப்படுகிறது என்றால் பாவக்கறை பிடித்த மனிதர்களின் அழகு என்னவாகும்? மனித அழகெல்லாம் மிஞ்சும் அழகு பொருந்தியவர்கள் தேவதாய். எனவேதான் அவர்கள் நேசிக்கப்படவும், மகா அன்புக்கு பாத்திரமானவர்களாகவும் இருக்கிறார்கள்.*



*"உம்முடைய வாசஸ்தலங்கள் எம்மாத்திரம் இன்பமானவைகளாய் இருக்கின்றன..." (சங். 83:1) என்கிறார் தாவீது அரசர். இனிமையானவையே இன்பமானவையே எப்போதும் நேசிக்கத்தக்கவையாக திகழ்கின்றன. பரிசுத்த கன்னிமாமரி தேவனின் சமுகத்தில் அவரது பார்வையில் மிகவும் இனிமையானவர்களாக திகழ்கின்றார்கள். ஏனெனில் மாதா மிகுந்த அழகுள்ளவர்கள். அர்ச். அல்போன்ஸ் லிகோரியார், 'மரியாய் சர்வேசுரனின் கண்களுக்குத்தானே அன்பாக விளங்குகிறார்கள்' என்ற அர்ச். லாரன்ஸின் ரிச்சர்டு என்பவரின் வாக்கை வியாக்கியானம் செய்கையில்: "மாமரி சர்வேசுரனின் கண்களுக்கு எவ்வளவு அழகாகத் தெரிகிறார்களென்றால், அவர் மாதாவின் சௌந்தர்யத்தால் மயங்குகிறார்" என்று கூறுகிறார். இதனைப்பற்றியே உந்நத சங்கீதம்: "என் பிரியே, ஆ! நீ எவ்வளவோ சௌந்தர்யமுள்ளவள்; உன் லாவண்ணியம் எம்மாத்திரமென்பேன்?!" (உந். சங். 4:1) என்று உரைக்கிறது. இப்படியாக தனது அழகு சௌந்தரியத்தால் சர்வேசுரனின் கண்களுக்கு முன்பாக வசீகரித்த பரிசுத்த கன்னிகை தேவனின் அன்புக்குப் பாத்திரமானவர்களாகவும், ஏன் மனுக்குலம் அனைத்தினுடையவும் மகா அன்புக்குப் பாத்திரமானவர்களாகவும் திகழ்கின்றார்கள்.*

### தமது தாய்மையால், அன்புக்கு பாத்திரமான மாதா !

*உலகில் சிறந்தது தாய்மையே! ஏனெனில் அதன் தன்மையை ஒருபோதும் விளக்கிக் கூற முடியாது. ஒரு தாய் தன் தாய்மையாலே தன் மகவின் அன்புக்குப் பாத்திரமானவளாக இருக்கிறாள். நம்மைப் பெற்றெடுத்த தாயைவிட பன்மடங்கு அன்புள்ள தாய் உண்டென்றால் அது* **தேவதாய்** *மட்டுமே. அவர்களுக்கு மட்டுமே நமது அன்பையெல்லாம் பெற முழு உரிமையுண்டு. ஏனெனில் அவர்களே நம்மை மீட்க மனுவுருவெடுத்த சேசுக் கிறீஸ்துவை ஈன்று நம்மை தேவ வரப்பிரசாதத்தில் பெற்றெடுத்தார்கள். ஆம்! நமக்கு மீட்பரைத் தந்து அவரோடு பாடுகளை அநுபவித்து அவரோடு இணைந்து மீட்பின் பேறுபலன்களையெல்லாம் சம்பாதித்து, நம்மை சிலுவையடியில் வியாகுலத்தோடு பெற்றெடுத்த "வரப்பிரசாதத்தின் தாய்" அவர்கள்! இதனால் நம்மீது அவர்கள் கொண்டுள்ள அன்பு துலங்குகிறது. எனவேதான் அவர்கள் மகா அன்புக்கு பாத்திரமானவர்களாக திகழ்கின்றார்கள்.*

*எனவே திருச்சபையோடு சேர்ந்து நாமும் அவர்களை "***மகா அன்புக்கு பாத்திரமான மாதாவே***" என்று அழைத்து அதிகதிகமாக நேசிப்போமாக!*

## அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் பெரும் ஆதரவாளர்!

*கத்தோலிக்கப் பாரம்பரிய சத்தியங்கள், பாரம்பரிய திருவழிபாட்டு முறைகளின்மீது மிகுந்த பற்று கொண்டிருந்த சுவாமியவர்கள், அவற்றை காக்க, மீண்டும் கொண்டுவர அரும்பணியாற்றினார். தமது எழுத்துக்களாலும், வெளியீடுகளாலும், மொழிபெயர்ப்பு நூல்களாலும் மக்கள் மத்தியில் மாதா பக்தியையும், கத். விசுவாச சத்தியங்களைக் கைக்கொள்ள விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். திருச்சபையின் பாரம்பரிய சத்தியங்களையும், கத். குருத்துவத்தையும் பேணி காக்கும் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையை இனங்கண்டபோது இரு கரம் விரித்து வரவேற்று, இந்தியாவில் காலூன்ற செய்தார். இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கத். பாரம்பரிய விசுவாசமும், திரிதெந்தீன் லத்தீன் திவ்விய பலிபூசையும் மீண்டும் தழைத்துள்ளதென்றால் அதற்கு முக்கிய காரணம் சங். அந்தோனி சேவியர் சுவாமியவர்கள்தான் என்றால் மிகையாகாது.*

*எப்போதும் பாப்பரசரின் உரோமையோடும், மேற்றிராசன ஆயரோடும் ஐக்கியமாக இருப்பதிலேயே கவனமாக இருந்த அவர், அந்த காரணங்களைக் காட்டியே தாம் ஆதரித்து வந்த அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் உறவை விட்டு சில காலம் விலகியிருந்தார். பின்னர் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் பாப்பரசரோடு ஐக்கியம் என்ற நிலைபாட்டை கண்டு உறுதி செய்த பிறகே, மீண்டும் தமது உறவை புதுப்பித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*தன்னை எப்போதும் மறைத்துக்கொண்டு காரியம் ஆற்றுவதில் சிறந்த இவர், எமது சபையின் ஸ்தாபகர் காலஞ்சென்ற அதிமேற்றிராணியார் வந். மார்செல் லெஃபவர் ஆண்டகையோடு கடித தொர்பு கொண்டிருந்தார். சபையின் உயர்மட்ட அதிகாரிகளோடான அவரது நட்பு இறுதி வரை தொடர்ந்தது. எமது சபையில் பல இந்திய குருக்கள் உருவாக காரணமான அவர், எப்போதும் சபை குருக்களுக்கு உபகாரியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.*

*அன்னாரது மறைவு உண்மையிலேயே கத்தோலிக்கத் திருச்சபைக்கு பெரும் இழப்பாகும். எம் சபையும் ஒரு பெரும் ஆதரவாளரை - சிறந்த நண்பரை- வழிகாட்டியை இழந்து வேதனையடைகிறது. அவரது மறைவிற்கு அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபை தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டு, அவரது ஆன்மா சர்வேசுரனில் நித்திய இளைப்பாற்றியை அடைய மன்றாடுகிறது.* **R.I.P.**

*இவண்*
*அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபை, இந்தியா.*

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## அருள்நிறை மந்திரத்தின் வியாக்கியானம் (தொடர்ச்சி)

**ஆசீர்வதிக்கப்பட்டவள்:–** சகல சம்மனசுக்களுக்கும் மனிதர்களுக்கும் மேலாக அர்ச். கன்னிமரியம்மாள் இஷ்டப்பிரசாதம், புண்ணியம், மகிமை, வல்லபம் முதலிய வரங்களைப் பெற்றிருக்கிறதினாலும், தமது கன்னி மகிமைக்கு ஏதேனும் பழுதின்றி, மனுஷ சுபாவத்தை எடுத்த சுதனாகிய சர்வேசுரனுக்குத் தாயாராயிருப்பதி னாலும், பரலோக பூலோக இராக்கினியாயிருப்பதினாலும், சகல சிருஷ்டிகளும் அவளை வணங்கி வாழ்த்தி ஸ்துதிக்கிறார்கள்.

**ஆசீர்வதிக்கப்பட்டவர்:–** அர்ச். கன்னிமரியாயின் திருக்குமாரனாகிய சேசுநாதர்சுவாமி மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனுமாயிருக்கிறபடியினாலே, சம்மனசுக்கள் முதலிய சகல சிருஷ்டிகளுடைய ஸ்துதிக்கும் ஆராதனைக்கும் பாத்திரமானவராயிருக்கிறார். அவர் சர்வேசுரனாகியமட்டும் அளவில்லாத சகல நன்மைகளையும் சுபாவமாய் உடையவர்; மனுஷனாகிய மட்டும் படைக்கப்பட்ட வஸ்து அடையக்கூடிய சகல தேவ வரங்களையும் ஆசீர்வாதங்களையும் அடைந்திருக்கிறார்.

### அர்ச். மரியம்மாள் மெய்யாகவே சர்வேசுரனுடைய தாயார்

**(1) சர்வேசுரனுடைய மாதாவே** என்று சொல்லும்போது, அர்ச். கன்னிமரியம்மாள் **தேவசுபாவத்தைப் பிறப்பித்தாள் என்று சற்றும் நினைக்கப்படாது.** ஆனால் சுதனாகிய சர்வேசுரன் அவளுடைய திரு உதரத்தில் உற்பவித்து, மனுஷ சுபாவத்தை எடுத்து, தம்முடையதாக்கிக் கொண்டார் என்பதே கருத்து. இந்த மனுஷ சுபாவத்தை எடுத்துக்கொண்ட ஆள் சர்வேசுரனாயிருக்கிறபடியினாலே, அர்ச். மரியம்மாள் சர்வேசுரனுடைய தாயாரென்று ஒத்துக்கொள்ளவேண்டியது.

**(2) சில பதிதர் சொன்னதுபோல சேசுநாதரிடத்தில் இரண்டு ஆட்கள் இருந்தால்,** அர்ச். கன்னி மரியம்மாள், மனுஷ ஆளுக்கு மாத்திரம் தாயாராயிருப்பாளென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் சேசுநாதரிடத்தில் ஒரே ஆள் மாத்திரம் உண்டென்பது வேத சத்தியம். அவரிடத்தில் இரண்டு ஆட்களிருந்தால், சுதனாகிய சர்வேசுரன் மெய்யாகவே மனுஷாவதாரம் பண்ணவில்லை, நமக்காக மரணமடையவில்லை, நம்மை இரட்சிக்கவில்லையென்று தீர்மானிக்கவேண்டியிருக்கும். அவர் ஸ்தாபித்த வேதம் முழுவதும் அடியோடு அழிந்துபோகும் !

**(3) சேசுநாதரிடத்தில் ஒரே தேவ ஆள் மாத்திரம் உண்டு:–** ஏனெனில் அவருடைய மனுஷீகம் தன்னிலேதானே முழுமையும் நிலைத்திருக்கிறதில்லை. இரண்டாம் ஆளாகிய சர்வேசுரன் எப்படித் தேவ சுபாவத்தைச் சொந்தமாய்க் கொண்டிருக்கிறாரோ, அப்படியே மனுஷ சுபாவத்தையும் தமக்குச் சொந்தமாக ஒன்றித்திருக்கிறார். ஒரே ஆள் தேவ சுபாவத்தையும் மனுஷ சுபாவத்தையும் சொந்தமாய்க் கொண்டிருக்கிறதினாலேயும் அர்ச். கன்னிமரியாயி தன் உதரத்திலிருந்து மனுஷ சுபாவத்தை எடுத்த இந்த தேவ ஆளைப் பெற்றெடுத்ததினாலேயும், அவள் மெய்யாகவே தேவதாயாயிருக்கிறாள் என்று சொல்லுகிறது நியாயமே.

(தொடரும்)